2006 ஆகஸ்ட் 25]

குடும்ப அட்டைகள் கிடைக்கும் என்று அவர்கள் கருதிக்கொண்டு இருக்கிறபோது, வட்டாட்சியர் அவர்களிடத்திலே கேட்கிற நேரத்தில், ‘குடும்ப அட்டைகளை சென்னையிலே அச்சடித்துத்தான் இங்கே வர வேண்டியிருக்கிறது. அது கிடைத்தவுடன் அனைவருக்கும் வழங்கப்படும்’ என்று வட்டாட்சியர்கள் கூறுகிறார்கள். அது எப்போது வழங்கப்படும் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இது நியாய விலைக் கடை சம்பந்தப்பட்ட கேள்வி.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்ற ஆட்சியிலே, இப்படி அதிகமான கார்டுகளுக்கான மனுக்கள் எல்லாம் பெற்று, கிட்டத்தட்ட 35 இலட்சம் மனுக்கள் இங்கே எழிலகத்திற்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில், ஆணையரிடத்திலே வந்தன. தேர்தல் வந்த காரணத்தினால் அவை எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டன. இப்பொழுது எல்லா மாவட்டங்களிலும், அது சம்பந்தப்பட்ட மனுக்களைத் திரும்ப அனுப்பி, மாவட்ட நிர்வாகம் இன்றைக்கு சோதித்து, original card, அதாவது உண்மையானவர்களைக் கண்டறிந்து, கார்டு வழங்குகின்ற அந்தப் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் அவர்களுக்குக் கட்டாயம் கார்டு வந்து சேரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 92, திரு. அ. தமிழரசு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

92—

TRUTH ALONE TRIUMPHS

புதிய கட்டடம்

***1597—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கேதுநாயக்கன்பட்டிபுதூர் பகுதியிலுள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஆகஸ்ட் 25

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியிலுள்ள கேதுநாயக்கன்பட்டிபுதூர் நியாய விலைக் கடைகளுக்குத் தேவையான நிலத்தை தானமாக வழங்க களவாய்ப்புதூர் பஞ்சாயத்துத் தலைவர் முன்வந்துள்ளதால், அந்நிலம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. அ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி அந்தக் கிராமத்திலே இருக்கின்ற நியாய விலைக் கடை ஓட்டுக் கட்டடத்திலே 20 ஆண்டுகாலமாக இருந்து வருகிறது. அந்தப் பகுதியிலே எஸ். பாளையம், காந்திநகர், இருமக்கவுண்டர் தோட்டம், சேவிக்கவுண்டர் காட்டு வளவு, கே.என். புதூர் ஆகிய பல்வேறு கிராமங்களிலேயிருந்து அங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். சுமார் 600-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகளுக்கு அங்கேயிருந்து வாங்கி வருகிறார்கள். எனவே, அவர்களது நலன்கருதி புதிதாக கட்டடம் உடனடியாகக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேதுநாயக்கன்பட்டிபுதூர் பகுதியில், கேதுநாயக்கன்பட்டிபுதூர் வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் 6 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் 3 நியாய விலைக் கடைகள் அரசுக் கட்டடத்திலும், 2 நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்திலும், கேதுநாயக்கன்பட்டிபுதூர் நியாய விலைக் கடை இலவசக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. இதில் 2 நியாய விலைக் கடைகளுக்கு, கேதுநாயக்கன்பட்டிபுதூர் மற்றும் களவாய்ப்புதூர் புதிய கட்டடம் கட்டத் தேவையான நிலத்தை தானமாக வழங்க களவாய்ப்புதூர் பஞ்சாயத்துத் தலைவர் முன் வந்துள்ளதால் அந்நிலம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், அரசுக் கட்டடம் கட்டுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதியில், திருமருகல் ஒன்றியத்திற்குட்பட்ட நியாய விலைக் கடைகளுக்குத் தேவையான பொருட்களை சன்னாநல்லூர்

2006 ஆகஸ்ட் 25]

குடோனில் இருந்து கடந்த காலத்தில் கொண்டு சென்றார்கள். அது, கடந்த 2 ஆண்டுகாலமாக நாகப்பட்டினம் என்று மாற்றப்பட்டு, இப்போது அங்கிருந்து பொருட்கள் கொண்டு வருவதில் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, பழையபடியே சன்னாநல்லூர் குடோனில் இருந்து எடுத்துச் செல்வதற்கு வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியைப் பொறுத்தது கேள்வி. இதற்குத் தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரம் அறிவிக்கப்படும்.*

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார்.*

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி மட்டுமல்ல, மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள், மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு, 100 ரேஷன் கார்டுகள் இருக்கின்ற, இதைப்போன்ற இடங்களுக்கு ஒரு நியாய விலைக் கடை அமைத்துத் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டுகள் மிகவும் குறைவாக இருக்கின்ற இந்தப் பகுதிகளில் கடைகளைப் போட வேண்டுமென்று சொன்னால், அதற்குப் பகுதி நேரம் — ஆட்கள் போடுவதற்கு, தளவாடச் சாமான்கள், இதற்கெல்லாம் அதிகமாகச் செலவாகுமென்ற காரணத்தால் சாத்தியக்கூறுகள் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகவேலு.*

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகள் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கிறதா? ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர் நிதியிலே அந்தக் கட்டடம் கட்டுவதற்கு நான் எழுதிக்கொடுத்தது நிலுவையிலே இருக்கிறது. ஆகவே, நியாய விலைக்

கடைக் கட்டடங்கள் கட்டுவதற்கு தற்போது அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியிலே நான்கு பகுதி நேரக் கடைகளுக்கு அனுமதி வேண்டி நான் கோரிக்கை வைத்தது ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே நிலுவையிலே இருக்கிறது. அதற்கும் உரிய ஆணைப் பிறப்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து ஏற்கக்கூடியதுதான். அதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 93, மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

93—

உழவர் சந்தை

***772—மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் நிறைவேற்ற முன்வந்திருப்பதனால் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, திரு. செ. தாமோதரன், *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

94—

குளிர்பதனக் கிடங்கு

***1958—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—